**செய்தி வெளியீடு**

**செய்தி வெளியீடு எண்.13/2022** **நாள் : 22-04-2022**

**சென்னை குடிநீர் வாரிய சிந்தாதரிப்பேட்டை தலைமை அலுவலகத்தில்**
**புதிய மின்சார கேபிள் மாற்றி அமைக்கும் பணி மேற்கொள்ளபடவுள்ளதால்**
**அவசரத் தேவைகளுக்கு குடிநீர் பெறுவதற்கும், கழிவுநீரை அகற்றுவதற்கும்**
**சம்மந்தப்பட்ட பகுதி பொறியாளர்களை தொடர்பு கொள்ளலாம்**

**சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்**

சென்னை குடிநீர் வாரிய சிந்தாதரிப்பேட்டை தலைமை அலுவலகத்தில் புதிய மின்சார கேபிள் மாற்றி அமைக்கும் பணி 23.04.2022 சனிக்கிழமை காலை 6 மணி முதல் 24.04.2022 ஞாயிற்று கிழமை காலை 10 மணி வரை மேற்கொள்ளபடவுள்ளதால் இணையதள வழியாக பெறப்படும் சேவைகளாகிய குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி செலுத்துதல், லாரிகள் மூலம் பெறப்படும் குடிநீர், புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு புகார் மையம், பொதுமக்கள் குறைதீர்க்கும் மையம் மற்றும் எம்.ஆர்.சி. நகரில் தற்போது இயங்கும் தலைமை அலுவலக இணைய தள இணைப்பு ஆகிய அனைத்து சேவைகளும் செயல்படாது என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் வினியோகம் தொடர்ந்து வழங்கப்படும்.

எனினும் பொதுமக்களின் நலன் கருதி 23.04.2022 மற்றும் 24.04.2022 காலை 10 மணி வரை அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெறுவதற்கும், கழிவுநீரை அகற்றுவதற்கும் தொலைபேசி எண் - 044-28454040 மற்றும் கீழ்க்கண்ட பகுதி பொறியாளர்களை அலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம் என சென்னை குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது .

| பகுதி | | தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரி | அலைபேசி எண். |
|---|---|---|---|
| பகுதி 1 | திருவொற்றியூர் | பகுதி பொறியாளர்-1 | 8144930901 |
| பகுதி 2 | மணலி | பகுதி பொறியாளர்-2 | 8144930902 |
| பகுதி 3 | மாதவரம் | பகுதி பொறியாளர்-3 | 8144930903 |
| பகுதி 4 | தண்டையார்பேட்டை | பகுதி பொறியாளர்-4 | 8144930904 |
| பகுதி 5 | ராயபுரம் | பகுதி பொறியாளர்-5 | 8144930905 |
| பகுதி 6 | திரு.வி.க.நகர் | பகுதி பொறியாளர்-6 | 8144930906 |
| பகுதி 7 | அம்பத்தூர் | பகுதி பொறியாளர்-7 | 8144930907 |
| பகுதி 8 | அண்ணா நகர் | பகுதி பொறியாளர்-8 | 8144930908 |
| பகுதி 9 | தேனாம்பேட்டை | பகுதி பொறியாளர்-9 | 8144930909 |
| பகுதி 10 | கோடம்பாக்கம் | பகுதி பொறியாளர்-10 | 8144930910 |
| பகுதி 11 | வளசரவாக்கம் | பகுதி பொறியாளர்-11 | 8144930911 |
| பகுதி 12 | ஆலந்தூர் | பகுதி பொறியாளர்-12 | 8144930912 |
| பகுதி 13 | அடையாறு | பகுதி பொறியாளர்-13 | 8144930913 |
| பகுதி 14 | பெருங்குடி | பகுதி பொறியாளர்-14 | 8144930914 |
| பகுதி 15 | சோழிங்கநல்லூர் | பகுதி பொறியாளர்-15 | 8144930915 |

நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் புதிய மின்சார கேபிள் மாற்றி அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு வழக்கம்போல் இணைய தள சேவைகள் அனைத்தும் செயல்படும் என குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,

சென்னைக் குடிநீர் வாரியம்